## அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
## *Ang Mo Kio Tamil Methodist Church*

**28th டிசம்பர் / December 2025 ஞாயிறு ஆராதனை**

✝ **ஆராதனைக்கு அழைப்பு** — **திருமதி. மேனகா என்தன்**
Call to Worship — Mrs. Menaka Anton

**இறைவணக்கப்பாடல்** — **பாடகர் குழு**
Introit — Choir

**ஜெபம்** — **திருமதி. மேனகா என்தன்**
Prayer — Mrs. Menaka Anton

✝ **தொடக்க பாடல்** — **சபையார் இணைந்து**
Opening Song — Congregation

### தெய்வாட்டுக் குட்டிக்கு

*1. தெய்வாட்டுக் குட்டிக்கு*
*பன் முடி சூட்டிடும்;*
*இன்னிசையாய்ப் பேரோசையாய்*
*விண் கீதம் முழங்கும்;*
*உள்ளமே போற்றிடு,*
*உனக்காய் மாண்டோராம்;*
*சதாகாலமும் அவரே*
*ஒப்பற்ற வேந்தராம்.*

*2. அன்பார்ந்த கர்த்தர்க்கு*
*பன் முடி சூட்டிடும்;*
*கை கால் விலாவின் காயங்கள்*
*விண்ணிலும் விளங்கும் .*
*பார்ப்பரோ தூதரும்*
*ஏறிட்டக் காயங்கள்?*
*பணிவரே சாஷ்டாங்கமாய்*
*மூடுவர் தம் கண்கள்.*

*3. சமாதானக் கர்த்தர்!*
*பன் முடி சூட்டிடும்;*
*போர் ஓய்ந்து ஜெப ஸ்தோத்ரமே*
*பூமியை நிரப்பும்;*
*ஆள்வார் என்றென்றைக்கும்;*
*ஆளும் எவ்விடமும்*
*விண் லோக பாக்கிய சிறப்பு*
*விளங்கி வளரும்*

*4. ஆண்டாண்டும் ஆள்வோர்க்கு*
*பன் முடி சூட்டிடும்;*
*சராசரங்கள் சிருஷ்டித்தோர்*
*உன்னத தெய்வமும்;*
*பாவிக்காய் ஆருயிர்*
*ஈந்த நல் மீட்பரே,*
*சதா நித்திய காலமாய்*
*உமக்குத் துதியே.*

✝ **மாறி மாறி வாசித்தல் 52ம் ஞாயிறு** — **சபையார் இணைந்து**
"சங்கீதம் 148" — Congregation

"வானங்களில் உள்ளவைகளே, கர்த்தரைத் துதியுங்கள்"

Psalter Reading – "Psalm 148"

✝ **தந்தை போற்றி** — **சபையார் இணைந்து**
Gloria Patri — Congregation

**துதி ஆராதனை**
Singspiration

**ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**
Thanksgiving & Pastoral Prayer

**பரமண்டல ஜெபம்** — **சபையார் இணைந்து**
Lord's Prayer — Congregation

✝ **காணிக்கைப் பாடல்** — **சபையார் இணைந்து**
Offertory Song — Congregation

### துதித்துப் பாடிட பாத்திரமே

*1. துதித்துப் பாடிட பாத்திரமே*
*துங்கவன் ஏசுவின் நாமமிதே*
*துதிகளின் மத்தியில் வாசம் செய்யும்*
*தூயனை நேயனை ஸ்தோத்தரிப்போமே*

**ஆ அற்புதமே அவர் நடத்துதலே**
**ஆனந்தமே பரமானந்தமே**
**நன்றியாலுள்ளமே மிக பொங்கிடுதே**
**நாம் அல்லேலூயா துதி சாற்றிடுவோம்**

*2. கடந்த நாட்களில் கண்மணிபோல்*
*கருத்துடன் நம்மைக் காத்தாரே*
*கர்த்தரையே நம்பி ஜீவித்திட*
*கிருபையும் ஈந்ததால் ஸ்தோத்தரிப்போமே – ஆ*

*3. அக்கினி ஊடாய் நடந்தாலும்tha*
*ஆழியில் தண்ணீரைக் கடந்தாலும்*
*சோதனையோ மிக பெருகிடினும்*
*ஜெயம் நமக்கிந்ததால் ஸ்தோத்தரிப்போமே - ஆ*

*4. இந்த வனாந்தர யாத்திரையில்*
*இன்பராம் இயேசு நம்மோடிருப்பார்*
*போகையிலும் நம் வருகையிலும்*
*புகலிடம் ஆனதால் ஸ்தோத்தரிப்போமே - ஆ*

*5. வாஞ்சைகள் தீர்த்திட வந்திடுவார்*
*வாரும் என்றே நாம் அழைத்திடுவோம்*
*வானத்திலே ஒன்று சேர்ந்திடும் நாள்*
*விரைந்து நெருங்கிட ஸ்தோத்தரிப்போமே – ஆ*

✝ ***பூலோகத்தாரே யாவரும்*** — ***சபையார் இணைந்து***
Doxology — Congregation

✝ ***திருமறைப் பாடம்*** — ***திருமதி. பூமா மகேஷ்***
Scripture Reading — Mrs. Booma Mahesh
***யோவான் 1 : 29 - 37***
John 1 : 29 - 37

***அருளுரை*** — ***போதகர். ஜேசுதாஸ் சார்லஸ்***
Sermon — Pastor. Jesudoss Charles

✝ ***அர்ப்பணகீதம்*** — ***சபையார் இணைந்து***
Offertory & Closing Song — Congregation

***<u>ஐயையா, நான் வந்தேன்</u>***

***ஐயையா, நான் வந்தேன்; - தேவ***
***ஆட்டுக்குட்டி, வந்தேன்.***

*1. துய்யன் நீர் சோரி பாவி எனக்காய்ச் சிந்தித்*
*துஷ்டன் எனை அழைத்தீர், தயை*
*செய்வோம் என்றே, இதை அல்லாது போக்கில்லை*
*தேவாட்டுக்குட்டி, வந்தேன்; - ஐயையா*

*2. உள்ளக் கறைகளில் ஒன்றேனும் தானாய்*
*ஒழிந்தால் வருவேன், என்று - நில்லேன்;*
*தெள் உம் உதிரம் கறை யாவும் தீர்த்திடும்;*
*தேவாட்டுக்குட்டி, வந்தேன்: - ஐயையா*

*3. எண்ணம் வெளியே போராட்டங்கள், உட்பயம்*
*எத்தனை எத்தனையோ! - இவை*
*திண்ணம் அகற்றி எளிஞனை ரட்சியும்;*
*தேவாட்டுக்குட்டி, வந்தேன்; - ஐயையா*

*4. ஏற்றுக்கொண்டு மன்னிப் பீந்து சுத்திகரித்*
*தென்னை அரவணையும் மனம்*
*தேற்றிக்கொண்டேன் உந்தன் வாக்குத்தத்தங்களால்;*
*தேவாட்டுக்குட்டி, வந்தேன், - ஐயையா*

*5. மட்டற்ற உம் அன்பினாலே தடை எதும்*
*மாறி அகன்றதுவே, - இனி*
*திட்டமே உந்தம் உடைமை யான் என்றென்றும்;ன்*
*தேவாட்டுக்குட்டி வந்தேன்! – ஐயையா*

***அறிவிப்புகள்***
Announcements

✝ ***<u>மனப்பாட வசனங்கள்</u>*** — ***சபையார் இணைந்து***
<u>Memory Verses</u> — Congregation
***யோவான் 1:14***
John 1:14

***14. அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும்***
***நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய***
***மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய***
***மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.***

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** ⁄ Indicates Congregation standing